| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **175/2012** |
| தேதி | : | **19.02.2026.** |
| பெயர் | : | **பாலாஜி த/பெ பழனி.** |

**வா.த.சா.1 (PW1) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**<u>வா.த.சா.1. (PW1) - குறுக்கு விசாரணை:</u>**

1) தாவா சொத்தின் சர்வே எண். 24 ஆகும். தாவா சொத்து ஆதியில் யசோதம்மாள் என்பவருக்கு சொந்தமானது. அதன் பின்னர் இந்திராணியம்மாள் என்பவரின் பேரில் இருந்தது. அமராவதியம்மாள் எனது விற்பனையாளருக்கு தாவா சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் விற்பனை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அமராவதியம்மாள் தாவா சொத்தில் 67 சென்ட் நிலத்தை கிரயமாக பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதசாஆ 1 ன் படி அமராவதியம்மாள் என்பவர் யசோதம்மாள் என்பவருக்கு பிளாட் எண் 178 யை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான்.

2) பிளாட் எண் 178ன் மொத்த விஸ்தீரணம் 1800 சதுர அடி நிலம் ஆகும். அமராவதியம்மாள் என்பவர் யசோதம்மாள் என்பவருக்கு தாவா சொத்தில் மொத்தம் 67 சென்டில் பிளாட் எண் 178 ல் அடங்கிய 1800 சதுர அடி நிலம் மட்டும் கிரயம் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள மொத்தம் 67 சென்ட் நிலயத்தில் எத்தனை பிளாட்களாக லேஅவுட்டுகளாக போடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மூகாம்பிகை நகர் என்பது தாவா சொத்தில் போடப்பட்ட லேஅவுட்டு பெயர் ஆகும்.

3) வாதசாஆ 1ல் மூகாம்பிகை நகர் லேஅவுட்டு என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. வாதசாஆ 1 ல் பட்டா எண் குறிப்பிடப்படவில்லை. நான் மேற்சொன்ன பிளாட் எண் 178 யை யசோதம்மாளின் முகவரான இந்திராணியம்மாள் என்பரிடம் இருந்து கிரயம் பெற்றேன். நான் பிளாட் எண் 178 யை வாங்கும்போது யசோதம்மாளின் பெயரில் பட்டா இருந்ததா என்றால் சாட்சி முதலில் இருந்தது என்று பதில் அளித்தார். பின்னர் தாமாக முன்வந்து நிலனவில் இல்லை என்று பதில் அளித்தார். மேற்சொன்ன பிளாட்டை நான் வாங்கும்போது வருவாய் ஆவணங்கள் யசோதம்மாளின் பெயரில் இருந்ததா என்று

சரிபார்த்தேன். அப்போது அனைத்து ஆவணங்களும் அவரது பெயரில் தான் இருந்தது. நான் கிரயம் பெற்ற பின்னர் அனைத்து ஆவணங்களும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

4) யசோதம்மாளின் பெயரில் இருந்த வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கிரயம் செய்யும்போது எனது விற்பனையாளர் வைத்திருந்த ஆவணத்தில் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் மேற்படி பிளாட்டினை வாங்கும்போது வில்லங்கசான்றிதழ் பெற்று அதை சரிபார்த்த பின்னர் தான் சொத்தினை வாங்கினேன். வில்லங்கசான்றிதழ் நான் எப்போது வாங்கி பார்த்தேன் என்று நினைவு இல்லை. நான் மேற்படி சொத்தினை வாங்குவதற்கு வழக்கறிஞர் கருத்து பெற்றேனா என்றால் இல்லை. தாவா சொத்தினை வாங்கும்போது சரிபார்த்த வில்லங்கசான்றிதழ் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு நினைவு இல்லை.

5) பிரதிவாதியின் பெயரில் நான் வாங்கிய சொத்து உள்ளது என்ற விவரம் 2012 ம் ஆண்டு தான் முதலில் தெரியும். நான் வாங்கிய சொத்தில் வீடு கட்ட முயலும் போது பட்டா பெயர் மாற்றத்திற்காக விண்ணப்பம் அளித்த போது தான் தாவா சொத்தில் வில்லங்கம் இருந்தது எனக்கு தெரியவந்தது. அப்போது நான் வில்லங்கசான்றிதழ் வாங்கி பார்த்தேன். அதில் என்னுடைய பெயர் தான் வந்தது. தாவா சொத்தினை நான் 2006 ம் ஆண்டு வாங்கினேன். பட்டா பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பத்தை 2012 ம் ஆண்டு உரிய அதிகாரியிடம் வழங்கினேன்.

6) மேற்சொன்ன விண்ணப்பத்தினை முறையாக பணம் கட்டி ரசீது பெற்றேன். அதில் தாசில்தார் அவர்கள் வில்லங்கம் இருப்பதாக அதை நிராகரித்துவிட்டார். மேற்சொன்ன ரசீதுகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதி சதாசிவம் என்பவர் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 50 1/2 சென்ட் நிலத்தை 1969 ம் ஆண்டே ஆதியில் உரிமையாளராக இருந்த அமராவதியம்மாள், வேதாச்சலம் என்பவருக்கு பொது அதிகாரப்பத்திரம் ஒன்றை வழங்கிய விவரம் எனக்கு தெரியாது.

7) வாதசாஆ 4 ல் மேற்சொன்ன தாவா சொத்தில் ஒரு பகுதியான 25 1/2 (இருபத்தி ஐந்தரை) சென்ட் நிலத்தினை மேற்சொன்ன வேதாச்சலம் என்பவர் 1 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்ற விவரம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி தனது பெயருக்கு மாற்றப்பட்ட 25 1/2 (இருபத்தி ஐந்தரை) சென்ட் நிலத்தினை பிளாட் போட்டு தனித்தனியே விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியாது. அவர்

விற்பனை செய்தது போக மீதம் உள்ள 10 சென்ட் நிலம் அவர் வசம் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8) வாதசாஆ 4 அடிப்படையில் 30.01.2004 ம் தேதி தாவா சொத்தில் ஒரு பகுதியான 25 சென்ட் நிலத்தினை பாரதிதேவி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்சொன்ன பாரதிதேவி இவ்வழக்கில் ஒரு தரப்பினராக நான் சேர்க்கவில்லை. அவரை சேர்க்காத காரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்தானது எனக்கும், பிரதிவாதிகளுக்கும் உரிமை மாற்றமானது அமராவதியம்மாளின் உரிமை அடிப்படையில் தான் என்றால் சரிதான். நான் அமராவதியம்மாள் என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணம் பற்றி எனக்கு தெரியாது.

9) வாதசாஆ 5 மற்றும் வாதசாஆ 6 முறையே 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளுக்கு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகளுக்கு சார்பு செய்யப்பட்டதற்கான ஒப்புகை சீட்டும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தாவா சொத்தினை ரூபாய் 59,000 க்கு 2006 ம் ஆண்டு 897 சதுர அடி நிலத்தினை கிரயம் பெற்றேன். நான் வழக்கினை தாக்கல் செய்யும் போது தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தானது 2012 ம் ஆண்டு சுமார் 5 லட்சம் ரூபாய் மதிப்பு இருந்திருக்கும். நான் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கான அதனுடைய மதிப்பை ரூபாய் 59,000 என்று குறைத்து மதிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) இவ்வழக்கில் 3 ம் பிரதிவாதியை எனது விற்பனையாளர் என்ற முறையில் தரப்பினராக சேர்த்துக்ளேன். நான் 2,3 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கில் தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்றும், அதனை மீட்டு தருமாறும் கேட்டுள்ளேன். தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் 1 ம் பிரதிவாதியின் பெயரில் இருக்கிறது. அவர் தான் சொத்தின் முழு சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தினை நான் வாங்கிய பின்னர் அது என்னுடைய அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதை காட்ட ஆவணங்கள் ஏதாவது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு எதுவும் நினைவில் இல்லை.

11) தாவா சொத்தை நான் வாங்குவதற்கு முன்பாக அதை பார்வையிட்டேன். தாவா சொத்து சிக்கராயபுரம், மூகாம்பிகை நகரில் உள்ளது. மூகாம்பிகை நகர் லேஅவுட் எந்த

வருடம் போடப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் வாங்கிய சொத்து அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சொத்தாகும். தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்கம் தாவா சொத்தில் நான் அனுபவத்தல் இல்லாத காரணத்தினால் , அதை விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும் எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டிய வழக்கு என்றாலும் சரியல்ல.

12) தாவா சொத்தில் ஆதியில் இருந்து எனக்கு விற்பனை செய்த யசோதம்மாள் வரை அனைத்து நபர்களையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றாலும், அவ்வாறு சேர்க்காத காரத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கு 2, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தேவையற்ற தரப்பினர்கள் என்றாலும், அதன் அடிப்படையிலேயே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டிய வழக்கு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றாலும், 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், எனது சொத்தினை அடையாளம் காணமுடியாமல் 1ம் பிரதிவாதியின் சொத்தினை உரிமை கொண்டாட இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம் **: Sd/.** பாலாஜி**.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.